பாடம் :- குடியியல்

1ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- E. நிரோஷனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

பாட இலக்கம் : 03
தலைப்பு : எமது கலாசாரம்

01. சரியான விடையைத் தெரிவு செய்க.

1) பின்வருவனவற்றுள் இலங்கை தொடர்பான சரியான கூற்றுக்கள் அடங்கிய தொகுதியை தெரிவு செய்க.

A- பல இனங்களை உள்ளடங்கிய நாடாகும்.

B- பல மதங்களை பின்பற்றுவோர் வாழும் நாடாகும்.

C- ஆங்கில மொழியை பேசுபவர்கள் மாத்திரமே வாழும் நாடாகும்.

D- பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும் நாடாகும்.

E- விசேட பண்புகளை கொண்ட சமூகக் குழுக்கள் வாழும் நாடாகும்.

1. ABC 2. ACD 3. BDE 4. ABE

2) இலங்கை பிரசை என்ற வகையில் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகளில் ஒன்றல்லாதது

1. சமாதானம் 2. சகவாழ்வு 3. இனப்பாகுபாடு 4. சமத்துவம்

3) இலங்கையின் வாழும் ஒவ்வொரு சமூகக் குழுக்களுக்கும்

1. விசேட பண்புகள் உண்டு.
2. ஒரே மாதிரியான கலாசார பண்புகள் உண்டு.
3. பொதுவான பண்புகள் இல்லை.
4. மேற்கூறிய யாவும் பிழை.

4) அனைத்து கலாசாரத்தினராலும் பின்பற்றப்படும் விடயமொன்றல்லாதது

1. மத ஸ்தாபகரை வழிபடல்
2. மரண சடங்குகள்
3. சமயக்கிரியைகள்
4. உணவு உட்கொள்ளும் முறை

5) கலாசாரங்களின் விசேட அம்சம் யாதெனில்

1. சமூகத்திற்கு சமூகம் வேறுபடும்.
2. சமூகத்திற்கு சமூகம் ஒரே மாதிரியான கலாசார பண்புகள் உண்டு.
3. ஒன்றிலிருந்து ஒன்றை இலகுவில் வேறுபடுத்தி இனங்காண்டு கொள்ள முடியாது.
4. மேற்கூறிய யாவும் பிழை.

02. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இலங்கையில் வாழும் பிரதான இனக்குழுக்களை குறிப்பிடுக.

……

……

2. இலங்கையில் வாழும் மக்கள் பின்பற்றும் பிரதான மதங்களை குறிப்பிடுக.

……

……

3. இலங்கையில் வாழும் மக்கள் பயன்படுத்தும் பிரதான மொழிகளை குறிப்பிடுக.

……

……